# பத்தாம் வகுப்பு – தமிழ்
## ஆண்டு பொதுத் தேர்வு - ஆயத்தத் தேர்வு 2013
## புறவய வினாக்கள்
## பயிற்சி ஏடு / வினாத்தாள்

## இலக்கணப் பகுதி

..............

மொத்த மதிப்பெண் 162

நாள் தேர்வாளர் பெயர் வகுப்பும் பிரிவும்

### இயல் - 1

கோடிட்ட இடங்களை நிரப்புக

1. பூங்குழலி பொம்மை செய்தாள். இத்தொடரைச் செயப்பாட்டு வினையாக மாற்றும்போது, பொம்மை......................செய்யப்............. என வரும்.
2. அழகன் பாடம் எழுதுகிறான். இத்தொடரில், ஓர் எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்தால் ......................... தொடர் ஆகும்.
3. அன்பரசன் திருக்குறளைக் கற்றான். இத்தொடர் பிறவினையாக மாறும்போது, அன்பரசன் திருக்குறளை............................என வரும்.

தொடரை மாற்றி அமைக்க

4. திருக்குறளை அனைவரும் அறிவர் - வினாத்தொடாக மாற்றுக.
5. இமயமலை மிகவும் உயரமானது - உணர்ச்சித் தொடராக மாற்றுக.
6. கிளி கல்லால் அடிபட்டது – உணர்ச்சித் தொடராக மாற்றுக.
7. வாரியார், “குழந்தாய்! நாள்தோறும் திருவாசகம் படிக்கவேண்டும்’’ என்றார் – அயற்கூற்றாக்குக.
8. நேற்று புயல் வீசியது. மரங்கள் சாய்ந்தன – கலவைத்தொடராக மாற்றுக.

சந்திப்பிழையற்ற தொடராக மாற்றுக.

9. கயிற்றுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

ஒருமை பன்மை பிழை நீக்குக.

10. அவன் கவிஞன் அல்ல.

பிறமொழி சொல்லற்ற தொடராக்குக.

11. அவர்களிருவர்க்கும் இடையே விவாதம் நடந்தது.

வழூஉச் சொல்லற்ற தொடர் ஆக்குக.

12. வலதுபக்கச் சுவற்றில் எழுதாதே.

### இயல் - 2

கோடிட்ட இடங்களை நிரப்புக

13. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது..................................
14. தொழிலைக் குறிக்கும் சொல்................................
15. வினைமுற்று ..........................., ............................. என இருவகைப்படும்.
16. ஓர் எச்ச வினை ...............கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும்.

தொகைச் சொற்களை விரித்தெழுதுக.

17. இருவினை
18. முத்தமிழ்
19. மூவேந்தர்
20. நானிலம்
21. ஐந்திணை

## இயல் - 3

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

22. இளவழகன் வந்தான். இது ........................தொடர்.
    1. குறிப்பு 2. வெளிப்படை 3. எதுவுமில்லை.
23. மாடு என்னும் சொல் ....................... ஆகும்.
    1. உயர்திணைப்பொதுப்பெயர் 2. அஃறிணைப் பொதுப்பெயர் 3. விரவுப்பெயர்
24. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது.................குறிக்கும்
    1. பசு 2. காளை 3. கன்று

பொருத்துக

25. வெளிப்படைச் சொற்கள் - சோறு உண்டான்
26. குறிப்புச் சொல் - கல், மண்
27. இனங்குறித்தல் - மாடு பால் கறந்தது.

## இயல் - 4

கோடிட்ட இடங்களை நிரப்புக

28. ஒரு பொருள் குறித்துவரும் சொற்களையே........என்பர்
29. ஒரு பொருட் பன்மொழிக்குச் சான்று............................
30. இது செய்வாயா என்னும் வினாவிற்கு வயிறு வலிக்கும் எனக் கூறுவது.............விடை.
31. ஆடத் தெரியுமா என்னும் வினாவிற்குப் பாடத் தெரியும் எனக் கூறுவது.............விடை.
32. நன்னூல் கிடைக்குமா எனக் கடைக்காரரிடம் கேட்பது..........வினா.

## இயல் - 5

33. மான் ..........மருளும் பார்வை (உரிய உவமை உருபு இணைத்து எழுதுக)
34. தொகை உவமைகளை விரிவுவமைகளாக மாற்றி எழுதுக.
    1. மதிமுகம் 2. பவளவாய்
35. விரிவுவமைகளைத் தொகையுவமையாக மாற்றுக.
    1. கயல்விழிபோன்ற விழி 2. கிளி போன்ற மொழி
36. அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.
    1. மலப்பாதம் (உருவகமாக)
    2. விழிக்கயல் (உவமையாக)
    3. கனிவாய் (உருவகமாக)
    4. பல்முத்து (உவமையாக)

## இயல் - 6

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

37. வடக்கு என்னும் திசைப்பெயரொடு பிற திசைகள் வந்து சேரும்போது..............
    1. நிலைமொழி ஈறு நீங்கும் 2. நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும் 3. வருமொழி முதல் கெடும்.
38. மேற்கு நாடு .......................எனச் சேரும்.
    1. மேற்கு நாடு 2. மேநாடு 3. மேனாடு
39. கருமை குழி என்பது .............. எனும் விதிகளின் படி புணரும்.
    1. ஆதிநீடல், இனமிகல் 2. தன்னொற்றிரட்டல், இடையுகரம் இ ஆதல் 3.ஈறுபோதல், இனமிகல்

## இயல் - 7

கோடிட்ட இடங்களை நிரப்புக

40. ஒரு அகம், புறம் ஆகிய இரண்டும்.................இலக்கணம் ஆகும்.

41. குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்தும்...........எனப்படும்
42. நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி...........பகுதியாகும்.
43. யாமம் என்பது இரவு 10 மணிமுதல்.......வரை ஆகும்.
44. மருதம், நெய்தல் ஆகிய இரண்டனுக்கும்..........................பெரும்பொழுதுகளும் வரும்.
45. திருமால்..............நிலத்திற்குரிய தெய்வம்.
46. மணமுழா, நெல்லரிகிணை ஆகிய இரண்டும்...........திணைக்குரிய பறைகள்.
47. நெய்தல் திணைக்குரிய தொழில்................ஆகும்.

<u>உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u>

48. பொருளிலக்கணம்..............வகைப்படும்.
    1. இரண்டு 2. மூன்று 3. ஐந்து
49. அகத்திணைகள்............வகைப்படும்.
    1. மூன்று 2. ஐந்து 3. ஏழு
50. மார்கழி, தை ஆகிய இரண்டும்.............காலத்திற்குரியன.
    1. முன்பனி 2.பின்பனி 3. இளவேனில்
51. மருதநிலத்திற்குரிய தெய்வம்................
    1. முருகன் 2. திருமால் 3.இந்திரன்
52. பாலை நிலத்திற்குரிய பறவைகள்...........
    1. கிளி, மயில் 2.நாரை, அன்னம் 3. புறா, பருந்து.

<u>பொருத்துக</u>

53. குறிஞ்சி - முயல், மான்
54. முல்லை - புலி, கரடி
55. மருதம் - முதலை, சுறா
56. நெய்தல் - எருமை, நீர்நாய்

## இயல் - 8

<u>உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u>

57. புறத்திணைகள்.....................வகைப்படும்.
    1. ஐந்து 2. ஏழு 3.பன்னிரண்டு
58. நிரைகவர்தல் என்பது................
    1. கரந்தை 2. வெட்சி 3. உழிஞை
59. மண்ணாசைக் கருதிப் போருக்குச் செல்வது............
    1. வஞ்சித்திணை 2. காஞ்சித்திணை 3. வாகைத்திணை
60. பாடாண்திணை என்பது..............கூறுவது
    1. ஆண்மகனின் ஒழுகலாறுகள் 2. பெண்மகளின் ஒழுகலாறுகள். 3. போரின் தன்மைகள்
61. ஒரு தலைக்காமம் என்பது...............
    1. அன்பின் ஐந்திணை 2. கைக்கிளை 3. பெருந்திணை
62. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது...........ஆகும்.
    1. நொச்சி 2. தும்பை 3. காஞ்சி

## இயல் - 9

<u>உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u>

63. உலகு என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு.......
    1. நாள் 2. காசு 3. பிறப்பு
64. நல்லவை – இச்சொல் அலகிட்டால்............எனப் பிரியும்.
    1. நேர் நேர் 2. நிரைநேர் 3. நேர்நிரை

65. நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடி....................வரும்
    1. நாற்சீராய் 2. முச்சீராய் 3. ஐஞ்சீராய்
66. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் ..................முடிவது சிறப்பு
    1. ஆகாரத்தில் 2. ஏகாரத்தில் 3. ஓகாரத்தில்

கோடிட்ட இடங்களை நிரப்புக

67. நேரிசை வெண்பா இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்ற..........விகற்பத்தானும்...........விகற்பத்தானும வரும்.
68. இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்றுப் பல விகற்பத்தானும் வருவது.........ஆகும்.
69. வெண்பாவின் ஓசை...........ஆகும்.
70. ஆசிரியப்பாவின் வேறு பெயர்............ஆகும்.
71. ஆசிரியப்பாவின் ஓசை......ஆகும்.

விடுபட்ட இடங்களை நிரப்புக

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 72. | கட /னென் /ப | ............ | புளிமாங்காய் |
| 73. | நல் / லவை | நேர்நிரை | ........................ |
| 74. | எல் / லாம் | நேர் நேர் | ........................ |
| 75. | கட / னறிந் / து | .................. | கருவிளங்காய் |

## மொழித் திறன் பயிற்சி

உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.

76. நான் (கு) மழையில் நனைவது பிடிக்கும்.
77. அண்ணன், தம்பி வீடு (கு) சென்றார்
78. மாணவர்கள் (ஐ) வட்டமாக உட்சாரச் செய்க.
79. நான் (கு) திருக்குறளில் ஆர்வம் மிகுதி.
80. வேல்விழி திருக்குறள் (ஐ) படித்தாள்.

இளமைப் பெயர்களைப் பொருத்துக

81. ஆடு - கன்று
82. மான் - பிள்ளை
83. கீரி - குட்டி
84. சிங்கம் - குஞ்சு
85. கோழி - குருளை

நிறுத்தற்குறி இடுக.

86. சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம் சட்டம் நம்மை காக்கும்

பிறமொழிச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.

87. ஷேத்திரங்கள்தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக.ஷ
88. இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.
89. இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.
90. நாளை நடக்கவிருக்கும் மேட்சில் இந்தியா கண்டிப்பாக வின் செய்யும்.
91. நான் இந்தக் காலேஜின் ஓல்ட் ஸ்டுடண்ட்.
92. வேலன் சுயதொழிலில் அதிக இலாபம் ஈட்டினான்
93. அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது
94. அனைவரையும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைவர் அழைப்பு விடுத்தார்.

95. அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச் சிறந்த நிபுணர்
96. அலங்கரித்துக் கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி.

உவமைகளைச் சொற்றொடரில் அமைக்க

97. பசுமரத்தாணிபோல
98. குன்றின் மேலிட்ட விளக்குப்போல
99. அனலிடைப்பட்ட புழுவைப்போல
100. கடலில் கரைந்த பெருங்காயம் போல
101. இலவு காத்த கிளி போல
102. காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல
103. அடியற்ற மரம்போல
104. மடைதிறந்த வெள்ளம்போல
105. கல்மேல் எழுத்துபோல
106. அத்தி பூத்தாற்போல
107. மழைகாணாப் பயிர்போல
108. மலரும் மணமும்போல
109. வேலியே பயிரை மேய்ந்ததுபோல
110. கீரியும் பாம்பும்போல
111. உள்ளங்கை நெல்லிக்கனிபோல
112. கிணற்றுத்தவளைபோல
113. நிலவும் வானும்போல

மரபுத் தொடர் பொருளறிக

114. ஆயிரங்காலத்துப் பயிர்
115. எடுப்பார் கைப்பிள்ளை
116. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது
117. அவலை நினைத்து உரலை இடித்தல்
118. முதலைக் கண்ணீர்
119. அவசரக் குடுக்கை
120. ஆகாயத்தாமரை
121. கம்பி நீட்டல்
122. தாளம்போடுதல்
123. கானல்நீர்
124. பஞ்சாய்ப் பறத்தல்
125. குட்டிச் சுவர்
126. கொட்டியளத்தல்
127. வல்லினம் மிகும் இடம் ஒன்றனுக்குச் சான்று தருக
128. வல்லினம் மிகா இடம் ஒன்றகுக்குச் சான்று தருக.

ஒருமை பன்மை நீக்குக

129. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப்படக்கருவி என்ற கருவி பயன்படுகின்றன.
130. நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல் இருக்கின்றது.
131. இன்று பேருந்துகள் ஓடாது.
132. ஓர் அணில் மரத்தில் ஏறின.
133. நான் வாங்கிய நூல் இது அல்ல.

தொடருக்கு ஏற்ற வினா அமைக்க.

134. திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.

135. நடிப்புக் கலையையும் அரசியலையும் தம் இருகண்களாக எம்.ஜி.ராமச்சந்திரன் கருதினார்.

மரபுத் தொடருக்கேற்ற பொருளைத் தேர்நதெடுத்து எழுதுக.

136. இளங்கோவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாக வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர்.
    1. வாழை பயிரிடுதல் 2. பரம்பரை பரம்பரையாக 3. பயிர்த்தொழில்
137. எம்.ஜி.ராமச்சந்திரன் திரைவானில் கொடி கட்டிப் பறந்தார்.
    1. தனிப்புகழோடு விளங்கினார் 2. கொடி கட்டுதல் 3. கனவு காணுதல்

மரபுத் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக

138. சீட்டுக் கிழிந்து விட்டது
139. முதலைக்கண்ணீர்
140. கயிறு திரித்தல்

சொற்களுக்கு இருபொருள் எழுதுக

141. ஆறு .................., .....................
142. திங்கள் ....................., ......................
143. மாலை ......................, .....................
144. நகை ........................., ....................
145. மெய் .........................., ......................

உரிய வினைமரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

146. எங்கள் பள்ளிக்குச் சுற்றுச்சுவர்.....................(கட்டப்பட்டது, எழுதப்பட்டது)
147. பாரதியார் செய்யுளை.................(பாடினார், இயற்றினார்)
148. வேடன்................அம்பு யானையை வீழ்த்தியது. (எய்த, செலுத்திய)
149. மாறன் ஓவியத்தை...........(வரைந்தான், புனைந்தான்)
150. அந்தச் சிற்பம் ஒரே கல்லில்.................(வடிக்கப்பட்டது, செதுக்கப்பட்டது)

பொருத்துக

151. மயில் - கரையும்
152. கூகை - கத்தும்
153. யானை - குழறும்
154. காகம் - அகவும்
155. ஆடு - பிளிறும்

தமிழ் எண்களை அறிந்து எழுதுக

156. உன் வகுப்பில் உள்ள மொத்த மாணவர்கள் எண்ணிக்கை............
157. உன் இல்லத்தின் எண்................
158. ஒட்டுரிமைக்காக வரையறுக்கப்பட்டுள்ள வயது.............
159. பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் நீ பெற விரும்பும் மதிப்பெண்...........

தமிழில் எழுதுதல்

160. டாடி, வர்ற சண்டெ எனக்குப் பர்த்டே, நீங்க இன்னும் எனக்குப் பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே, வொய் டாடி? என்னோட பிரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச்சொல்லிக் கால் பண்ணியிருக்கேன்.

சண்டெ வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்கு. டோன்ட் வொர்ரி, டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போகலாம். இப்ப உனக்கு ஹேப்பிதானே.”

161. சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே?

வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனால்தான் லேட். சரி...சரி..பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கெட் கிடைச்சுதா?

பஸ் டென் தேர்ட்டிக்கு வரும். லாஸ்ட் வீக்கே ரிசர்வ் செய்தாச்சு.

162. பள்ளியிலிருந்து வீட்டிற்குள் விரைந்து நுழைந்த பாரி, தன் ஸ்கூல் பேக்கைத் தூக்கிப்போட்டு விட்டு மம்மி வாட்டர் என்று குரல் கொடுத்தான்.

பள்ளியிலிருந்து வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய்? கை கால்களை வாஷ் செய்துகொண்டு வா. சூடாக உனக்குப் பிடித்த டிபன் செய்து வைத்திருக்கிறேன். போய் யூனிபாரம் மாற்றிக்கொண்டு வா என்றாள், அவள் தாய்.

போம்மா என்று கூறிக்கொண்டு பேனைச் சுழலவிட்ட பாரி, டிவியைப் பார்த்தான்.

ஸ்கூல்விட்டு வந்தவுடனே எதற்கு டிவி? ஹோம் ஒர்க் செய்துவிட்டு அப்புறம் பார்க்கலாம். என்றாள், அவள் தாய்.

ஆசிரியர்களுக்கு வணக்கம்.

1. இந்த இரண்டாம தாள் 1 மதிப்பெண் பயிற்சித் தாளை, தேர்வுத்தாளாகவும் பயன்படுத்திக் கொள்க.
2. கற்றல்திறன் கொண்ட மாணவர்களுக்கு இப்பயிற்சி வினாத் தாளைக் கொடுத்து, அவர்களாகவே, புத்தகத்திலிருந்து விடையைக் கண்டுபிடிக்க வைத்து, தனித் தாளில் எழுதி வாங்குங்கள்.
3. கற்றல் சிறந்த மாணவர்களுக்குக் கொடுத்து, பிறகு தேர்வு வையுங்கள்.
4. இப்பயிற்சித்தாளில் இங்கிலிஷ் பத்தி, பழமொழி ஆகியவை சேர்க்கப்படவில்லை. பத்திகளைக் கதையாகச் சொல்லி எழுத வையுங்கள்.
5. ஒவ்வொரு தேர்வுக்கும் முன்பாக அமையும் சிறப்பு வகுப்பில் இதை வையுங்கள்

**வாழ்த்துகளுடன்**

**ரா.தாமோதரன், ப.ஆ., அ.மே.நி.பள்ளி, மெலட்டூர், தஞ்சை மாவட்டம் 614 301**
**உரையாடலுக்கு 9 9 6 5 8 5 1 3 4 5**